## இன்றைய வேளாண் செய்திகள்

### மழை இல்லாததால் பலாப்பழ விளைச்சல் குறைவு

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் மழை இல் லாததால் பலாப்பழம் விளைச்சல் குறைவாக இருப்பதால் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கொடைக்கானலில் ஆரஞ்சு, வாழை, பட்டர்பூருட் உள்ளிட்ட பல்வேறு வகையான பழங்கள் விளைந்து வருகின்றன. இதில் மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய நான்கு மாதங்கள் விளையக் கூடியது பலாப் பழம்.

கொடைக்கானல் பகுதிகளான பெருமாள்மலை, பேத்துப்பாறை, பாலமலை, அடுக்கம், அஞ்சுவீடு, வடகவுஞ்சி, வடகரைப்பாறை, ஊத்து, கும்பரையூர், உப்புபாறை மெத்து, மச்சூர் உள்ளிட்ட கீழ்மலைப் பகுதிகளில் அதிக அளவில் பலா மரங்கள் பராமரிக்கப்படுகின்றன. மழை அளவுக்கு ஏற்றவாறு பலாப்பழம் விளைச்சல் நன்றாக இருக்கும்.

ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கொடைக்கானலில் பருவமழை பொய்த்துள்ளதால் பழ வகைகளின் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. மிதமான வெப்பமும், மழையும் இருந்தால் பலா விளைச்சல் நன்றாக இருக்கும். தற்போது வழக்கத்தைவிட அதிகமான வெயிலும், போதிய மழையும் இல்லாததால் விளைச்சல் சற்று குறைந்து காணப்படுகிறது.

இதுகுறித்து பாலமலை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

கேரளாவுக்கு அடுத்தப்படியாக வெளிமார்க்கெட்டில் நல்ல விலைக்கு செல்வது கொடைக்கானல் பலாப்பழம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பருவ நிலை மாற்றம் காரணமாக கொடைக்கானலில் விளைச்சல் சற்று குறைந்துள்ளது.

கொடைக்கானல் பகுதிகளில் உள்ள ஆதிவாசிகளுக்கு சுமார் 5-மாதங்களுக்கு மேலாக பலாப்பழம் எடுப்பது, பழ மரங்களை பராமரிப்பது போன்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால் கொடைக்கானல், பழனி மலைப் பகுதிகளிலிருந்து வரும் காட்டு யானைகள் தொந்தரவால் வெகுவாக பலாப் பழம் விளைச்சல் பாதிக்கப்பட்டு வருகிறது

பழத்திற்கு தகுந்தாற் போல ரூ.80-முதல் ரூ.175-வரை விற்பனை செய்யப்படுகிறது கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கள் ஊர்களுக்கு செல்லும் போது பலாப் பழம் வாங்கிச் செல்கின்றனர்.

எனவே பலா மரங்களை பாதுகாப்பது குறித்து விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆலோசனைகள் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை!

**நீலகிரி,** மாவட்டத்திலுள்ள கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாவட்டத்தில் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்திருந்தும் அவற்றை விற்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளுடன் 15 தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும் உள்ளன. இவற்றில் சுமார் 25,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சிறு மற்றும் குறு விவசாயிகளான இவர்கள், தங்களது தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலையை இந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர்.

இந் நிலையில், இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்தே மாவட்டத்தில் மழைப்பொழிவு குறைவாகவே இருந்ததால் பசுந்தேயிலை வரத்தும் குறைந்தது. இதற்கிடையே, கடந்த ஒரு மாதமாக மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும்

பரவலாகப் பெய்து வரும் மழை காரணமாக தேயிலை வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

ஆண்டின் முதல் 5 மாதங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகளவில் இல்லாததால் அத்தியாவசிய தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர். கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மொத்த உற்பத்தியில் 20 சதவீத பசுந்தேயிலையைக் கூட விநியோகிக்க முடியாமல் அவதியுற்ற விவசாயிகள், தற்போது மகசூல் அதிகரித்துள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆனால், அதற்குள் மஞ்சூர் மற்றும் சுற்றுப் பகுதிகளிலுள்ள எடக்காடு, பிக்கட்டி உள்ளிட்ட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுவிட்டது. இதர கூட்டுறவு தொழிற்சாலைகளிலும் இம்முறை விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

கோட்டா முறை காரணமாக நாளொன்றுக்கு 40,000 கிலோ வரையிலான பசுந்தேயிலை அரைக்கும் திறன் கொண்ட தொழிற்சாலைகளில் தற்போது 20,000 முதல் 30,000 கிலோ வரையிலான பசுந்தேயிலையே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், எஞ்சிய பசுந்தேயிலையைப் பயன்படுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

கோட்டா முறையைத் தவிர்க்கவே அனைத்துக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளிலும் டிரையர் உள்ளிட்ட பல்வேறு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், அவற்றால் பலனில்லாததால் விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த பசுந்தேயிலையைப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கோட்டா முறையைத் தவிர்க்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 600 விவசாயிகளுக்கு அரசின் உதவித் தொகை

**அரக்கோணம்**

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2013-14ஆம் ஆண்டுக்கான திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கத் தளையினை தங்கள் சொந்த செலவில் அமைத்த விவசாயிகளுக்கு தமிழக அரசின் உதவித் தொகை ரூ.1493 வீதம் வழங்கப்படுகிறது.

அரக்கோணம் வட்டாரத்தைச் சேர்ந்த 600 விவசாயிகளுக்கு இந்தத் தொகைக்கான காசோலைகளை எம்.எல்.ஏ. சு.ரவி அண்மையில் வழங்கிப் பேசினார். அப்போது,வேளாண் துறை உள்ள அரசு நலத்திட்டப் பயன்கள் குறித்து விவசாயிகள் கேட்டுத் தெரிந்து அவைகளைப் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார். வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம்.வி.கிருஷ்ணா ரெட்டி தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரக்கோணம் ஒன்றியக் குழுத் தலைவர் பால்ராஜ் சீனிவாசன், வட்டார ஆத்மா திட்டத் தலைவர் நாகபூஷணம், அரக்கோணம் நிலவள வங்கித் தலைவர் ஏ.வி.ரகு, ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் கிருஷ்ணசாமி, பிரகாஷ், நவாஸ்அகமது, அரக்கோணம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவர் ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் மணிலா விதைகள்

**தண்டராம்பட்டு,**

விவசாயிகளுக்கு மானிய விலையிலான மணிலா விதைகள் வழங்கும் நிகழ்ச்சி தண்டராம்பட்டு வேளாண்மைத் துறை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜானகிராமன், திருவண்ணாமலை மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் விஸ்வநாதன், வேளாண் அலுவலர் நடராஜன், துணை அலுவலர் அன்பழகன்,உதவி வேளாண்மை அலுவலர்கள் கண்ணன், ரமேஷ், சுதாகர், உழவர் பணி கூட்டுறவு சங்கத் தலைவர் ஆர்.தேவேந்திரன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஜி.கஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## 80% மானியத்தில் சூரிய ஒளி மின் மோட்டார்கள்: பயன்பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

செய்யாறு,

80 சதவீத மானிய விலையில் சூரிய ஒளி (சோலார்) மின் மோட்டார்கள் அமைத்து பாசன வசதி பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏழுமலை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

விவசாயிகள் மின் கட்டணமின்றி பம்புசெட்டு மோட்டார்களை இயக்கிட திறந்தவெளிக்கிணறு, குழாய் கிணறு உள்ள விவசாயிகள், வேளாண்மைத் துறை சார்பில் 80 சத மானிய விலையில் சூரிய ஒளி மின் மோட்டார்கள் பாசன வசதிக்காக வழங்கப்படுகிறது.

விவசாயிகளிடம் இருந்து 20 சதவீதத் தொகையை மட்டுமே செலுத்தினால்போதும். தேவைப்படும் விவசாயிகள் சிட்டா, அடங்கல், வரைபடம், குடும்ப அட்டை நகல், போட்டோவுடன் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன் அடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்செங்கோட்டில் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 90 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

இந்தச் சங்கத்துக்கு ஆத்தூர், கெஙகவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அருர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1800 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக சனிக்கிழமை கொண்டு வந்தனர்.

ஈரோடு மஞ்சள் சந்தையை விட 700 மூட்டை மஞ்சள் அதிகம வந்திருந்தன.

ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து வந்த 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

இதில் ரூ. 80 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுu0கு ரூ. 6520 முதல் 7779 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.5930 முதல் ரூ.6520 வரை விலை போனது. பனங்காளி ரகம் ரூ. 9540 முதல் ரூ. 13,119 வரை விற்பனையானது. மேற்கண்ட தகவலை கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார். விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## தமிழகத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ரூ.24 கோடி ஒதுக்கீடு

**சேலம்**

தமிழகத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக கடந்த 3 ஆண்டுகளில் ரூ.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக ஊரகத் தொழில் துறை, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பி.மோகன் தெரிவித்தார்.

சேலம், அணைமேடு பகுதியில் உள்ள மாவட்ட பட்டுத் தொழில் மைய வளாகத்தில் பட்டு வளர்ச்சி தொழில்நுட்ப பயிலரங்கு, அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை சனிக்கிழமை நடைபெற்றன. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அமைச்சர் மோகன் பேசியது:

தமிழ்நாடு கச்சா பட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே 4-ஆவது மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டில் இப்போது 28,108 விவசாயிகளால் 32,654 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழக அரசு பட்டு விவசாயிகளுக்கு நிதி உதவி செய்து வருவதால், தேசிய அளவில் வெண் பட்டு உற்பத்தி, இளம்புழுக்கள் விநியோகம், பட்டுக்கூடு உற்பத்தித் திறன் ஆகியவற்றில் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆணைப்படி, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு விவசாயியைப் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் இதுவரை 310 ஊராட்சிகளில் 323 விவசாயிகள் புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட பட்டு வளர்ச்சித் துறைக்கு சொந்த கட்டடம் எதுவும் இல்லை. இதையடுத்து, ரூ.1.65 கோடி மதிப்பில் சேலத்தில் பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்துக்கு ஒரு புதிய கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்துக்கு ரூ.2 கோடி மதிப்பில் கூடுதல் பயிற்சி அறைகள், தங்கும் அறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அதிமுக ஆட்சிப் பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் பட்டுத் தொழில் வளர்ச்சிக்காக ரூ.24 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் பயன்பெறும் வகையில் பட்டுக் கூடுகள், கச்சா பட்டு நூலின் விலை விவரங்களை உடனுக்குடன் தொலைப்பேசி மூலம்

அறிந்து கொள்ள குரல் வழித் தகவல் அறியும் பரிமாற்ற முறை, இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பட்டு விவசாயிகளும், பட்டு நூற்பாளர்களும் 0427-2295231, 2295331, 2295631 என்ற தொலைப்பேசி எண்களைப் பயன்படுத்தி தகவல்களை பெற்று பயன் அடையலாம் என்றார் அவர்.

நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, மாவட்ட ஆட்சியர் மகரபூஷணம் உள்ளிட்ட ஏராளமானோர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

## மானாவாரி பருத்தி சாகுபடிக்கு சட்டிக் கலப்பை உழவு அவசியம்

**பெரம்பலூர்**

பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் சட்டிக் கலப்பை உழவு அவசியம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி முறையில் பருத்தி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான மழை பெய்ததால் விவசாயிகள் உழவுப் பணியை மேற்கொண்டு வருகின்றனர். மானாவாரி பருத்திச் சாகுபடிக்கு கரிசல் மண் பகுதிகளில் சட்டிக் கலப்பை கொண்டு முதலில் கோடை உழவு செய்ய வேண்டும். அப்போது மண்ணானது ஒன்று முதல் ஒன்றரை அடி வரை பெயர்ந்து, மண்ணின் கடினத் தன்மை குறைந்து பொல பொலவென மாறும். இதனால் ஆழ வேர் வளர்ச்சியுடைய பருத்தி செடியின் வேர் நன்றாக வளர்ந்து செழுமையாக இருக்கும்.

அதுமட்டுமன்றி, மண்ணின் நீர் பிடிப்புத் திறன் கூடுவதால் வறட்சிக் காலத்தில் பயிர்கள் சற்று தாக்கு பிடிக்கும் தன்மையையும் ஏற்படும். மண்ணில் உள்ள தீங்குயிரி பூச்சியினங்களின் இளம் நிலைகளான முட்டைகள், கூண்டுப் பருவம்

போன்றவை நன்றாக சூரிய ஒளியில் பட்டு அல்லது மிக ஆழத்தில் சென்று அழுகி உயிரிழப்பதால், பூச்சிகளின் தாக்குதலும் குறையும்.

எனவே, நடப்புப் பருவத்தில் மானாவாரி பயிராக பருத்தி சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் சட்டிக் கலப்பையை பயன்படுத்தி ஒரு முறை உழுதுவிட்டு, பிறகு நடவு செய்வதற்கு முன் கொக்கி கலப்பையை பயன்படுத்தி உழவு செய்து தொழு எரு அல்லது ரசாயன உரங்களை அடியுரமாக இட்டு பயிர் செய்தால் அதிக மகசூல் பெறலாம்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாவல் சாகுபடியில் சாதனைரூ. 6 லட்சம் சம்பாதிக்கும் விவசாயி

**நிலக்கோட்டை**:தமிழ் இலக்கியங்களில் நாவல் பழத்திற்கு முக்கிய இடம் உண்டு. சுட்ட பழமா...சுடாத பழமா எனக்கேட்டு, மாடு மேய்க்கும் சிறுவனுக்கும் புத்திசாலித்தனம் உண்டு என்பதை அவ்வை பாட்டிக்கு உணர்த்த, முருகக் கடவுள் பயன்படுத்தியது நாவல் பழத்தை தான். பழம் சிறியது தான்; அதன் மூலம் கிடைத்த ஞானம் பெரிதல்லவா...

அவ்வை பாட்டிக்கு கிடைத்த ஞானத்தை போல, நாவல் பழத்தின் மூலம் லட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மெட்டூர் விவசாயி ஜெயக்குமார். இவரது, பண்ணையில் 1.5 ஏக்கரில் குட்டை ரக நாவல் மரங்களையும், மீதி இடத்தில் நெல்லியும் வளர்க்கிறார். தனது நர்சரிக்காக, ஆந்திராவிற்கு செடிகள் வாங்கப் போன போது, பெரிய நாவல் கனியை பார்த்து சாகுபடி செய்ய ஆவல் கொண்டார்.

ஒன்றரை ஏக்கரில் 80 செடிகளை 22 அடி இடைவெளியில் நட்டு, சொட்டு நீர் பாசனம் அமைத்தார்; மரமாகும் வரை இயற்கை உரங்களை மட்டுமே அளித்தார். அடுத்த நான்கு ஆண்டுகளில், மரத்திற்கு 5 கிலோ பழம் கிடைத்தது. படிப்படியாக விளைச்சல் அதிகரித்து, 11 வது ஆண்டிலிருந்து மரத்திற்கு 60 கிலோ பழம் கிடைக்கிறது.

பொதுவாக, நாவல் மரம் 40 அடி வரை வளரும்;

பழங்களை பறிப்பது சிரமம். இவரது தோட்டத்தில் தொடர் கவாத்து மூலம் மரம் அதிக உயரம் வளரவில்லை; தரையில் அமர்ந்து கொண்டு பழங்களை பறிக்கலாம்.

ஒவ்வொரு பழமும் 15 கிராம் எடையில், தித்திப்பு அதிகம்.

ஜெயக்குமார் கூறுகையில்,

ஒவ்வொரு மரத்திலிருந்தும் 60 கிலோ பழங்களை தாராளமாக பறிக்கலாம். கிலோ 150 ரூபாய்க்கு விற்கிறேன். இரண்டு மாதத்தில் 6.75 லட்ச ரூபாய் சம்பாதித்துள்ளேன். செலவு போக 6 லட்ச ரூபாய் கிடைக்கும். ஒரு பழத்தின் விலை 2 ரூபாய்," என்றார். இவரிடம் பேச - 98659 25193

## கரீப் பருவ விதைப்புபணிகள் துவக்கம்

**புதுடில்லி**:நாட்டின் பல பகுதிகளில், கோடை காலத்தில் மேற்கொள்ளப்படும், கரீப் பருவ விதைப்பு பணிகள் துவங்கியுள்ளன.இதுவரையில், நெல் மற்றும் பருப்பு வகைகள் தலா, 2.38 லட்சம் மற்றும் 2.42 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளன.மேலும், 80 ஆயிரம் ஹெக்டேரில், எண்ணெய் வித்துக்களும், 43.52 லட்சம் ஹெக்டேரில் கரும்பும், 17.34 லட்சம் ஹெக்டேரில் பருத்தியும் பயிரிடப்பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஜூன் மாத தென்மேற்கு பருவமழையையொட்டி, கரீப் பருவ விதைப்பு பணிகள் துவங்குகின்றன. விளைந்த பயிர்களின் அறுவடை பணிகள், அக்டோபர் மாதம் துவங்கும்.

## வாத்துகள் வளர்ப்பதில் விவசாயிகள் ஆர்வம்

**விழுப்புரம்** : தீவனச் செலவு குறைவு மற்றும் முட்டை விலை உயர்வு போன்றவற்றால், வாத்து வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி

வருகின்றனர்.

சத்துணவு திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் சத்துணவுடன் முட்டை வழங்குவதால், மூன்று ஆண்டுகளாக முட்டை விலை உயர்ந்து வருகிறது. இத்திட்டம் துவங்கும் முன், ஒரு ரூபாய் 50 பைசாவிற்கு கிடைத்த கோழி முட்டை, நான்கு ரூபாய் வரை விற்கிறது. டாஸ்மாக் பார்களில், குடிப் பிரியர்கள் பலரும் வாத்து முட்டைகளை அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர். இதனால் வாத்து முட்டைகளின் விலை 6 ரூபாய் வரை விற்கிறது.இதனால் விவசாயிகள் சிலர், மழை பெய்து ஏரிகளில் தண்ணீர் தேங்கி நிற்பதைப் பயன்படுத்தி, வாத்து வளர்ப்பில் ஆர்வமாக உள்ளனர். இதற்காக ஆந்திரா பகுதியிலிருந்து ஒரு வாத்து குஞ்சு, 20 ரூபாய்க்கு வாங்கி வந்து, வளர்க்க துவங்கியுள்ளனர். இந்த வாத்து குஞ்சுகள் வளர்ந்து இரண்டு மாதத்திற்கு பிறகு, முட்டை இட துவங்கும்.வாத்து முட்டை மற்றும் இறைச்சியை அதிகளவு மக்கள் விரும்பி சாப்பிடுவதால் கூடுதல் விலை கிடைக்கிறது. ஏரி, குளம், குட்டைகளில் உள்ள தண்ணீரில் மேய்ப்பது மற்றும் அறுவடை செய்யும் நிலங்களில் மேய்ச்சலுக்கு விடுவதே, இதற்கு இரை கொடுக்கும் வழிகளாகும். வாத்துகளுக்கு என்று தனியாக தீவன முறையும் இல்லை.இதனால் குறைந்த செலவில் கூடுதல் லாபம் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வமுடன் வாத்து வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

## விவசாய நிலத்தில் இயற்கை உரமிட்டு விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை

**கள்ளக்குறிச்சி** : கள்ளக்குறிச்சி பகுதி விவசாய நிலத்தில் இயற்கை உரமிட்டு விளைச்சலை பெருக்கும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்த மழையால், விவசாய நிலங்களில் ஏர் உழும் அளவிற்கு ஈரப்பதம் அடைந்துள்ளது. இதனால் கள்ளக்குறிச்சி அடுத்த சிறு வங்கூர் பகுதி விவசாய நிலங்களில் மாட்டு சாணத்தை மக்க வைத்து எருவாக்கி, அதனை அடி உரமாக தெளித்து வருகின்றனர். விலை உயர்ந்த செயற்கை உரங்களினால் மண்ணின் சக்தி குறைந்து மக்கிப்போய், எதிர்காலத்தில் விவசாயம் செய்ய முடியாத அபாயம் உருவாவதை தடுக்க, இதுபோன்று கால்நடை கழிவுகளை உரங்களை எருவாக பயன்படுத்தி

வருகின்றனர்.இதேபோன்று நஞ்சை நிலங்களில் தழைச்சத்துக்காக தக்கைபூண்டு, சணப்பை செடிகளையும் விதைத்து அதனையொட்டி, எருவாக பயன்படுத்துகின்றனர். இதுபோன்ற இயற்கை உரங்கள் இடுவதன் மூலம் மண்ணின் வளம் குறையாமல் காக்கப்படுகிறது.இத்துடன், நீண்ட காலத் திற்கு விவசாயம் செய்ய வாய்ப்பாக அமைகிறது. இதனால் கிராமப்பகுதி விவசாயிகள் இயற்கை உரமிடும் முறையை கடைபிடித்து வருகின்றனர்.

## மழை குறைவதால் வறட்சியின் ஆதிக்கம்

**குன்னூர்** : குன்னூரில் மீண்டும் தண்ணீர் தட்டுப்பாடு உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் ஜூன் மாத துவக்கத்தில் பருவ மழை துவங்கும் நிலையில், இந்த ஆண்டு ஜூன் மாதம் 14 நாட்கள் கடந்தும் தொடர்ந்து வெயில் நிலவி வருகிறது. காலை மற்றும் மாலை நேரங்களில் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும் இயற்கை காட்சிகள் சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்து வருகிறது. கடந்த மே மாதம் 4 நாட்கள் பெய்த மழையில் ரேலியா அணையில் நீர்மட்டம் உயர்ந்ததால், குடிநீர் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு கிடைத்துள்ளது. ஆனால், தற்போது மழையில்லாமல் வறட்சியின் தாக்கம் அதிகரிப்பதால், குடிநீர் தட்டுப்பாடு மீண்டும் தலைதூக்கும் அபாயம் உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நிலவும் வறட்சியினால், தேயிலை தூள் உற்பத்தியும் குறைந்துள்ளது.

## முருங்கை வரத்து அதிகரிப்பு; மார்க்கெட்டில் விலை குறைவு

**ஒட்டன்சத்திரம்** : ஜெயங்கொண்டம் பகுதியில் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட முருங்கைக்காய் டன் கணக்கில் கொண்டு வரப்படுவதால், ஒட்டன்சத்திரத்தில் அதிகரித்திருந்த முருங்கை விலை குறைந்தது.

உள்ளூர் பகுதியில் விளைந்த முருங்கை, ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அக்னி நட்சத்திரம் முடியும் வரை வரத்து அதிக அளவில்இருந்ததால் விலை அதிகரிக்காமல் கிலோ ரூ.20 என்ற நிலையிலேயே இருந்தது.ஜூனில் விசேஷ நாட்கள் அதிக அளவில்

இருந்ததால் முருங்கையின் தேவை பல மடங்கு அதிகரித்தது. தேவையை ஈடுகட்ட வியாபாரிகள் அதிக அளவில் முருங்கை வாங்கியதால் கிலோ ரூ. 65 க்கு விற்றது.தற்போது, ஜெயங்கொண்டம் பகுதியில் விளைந்த செடி முருங்கைக்காய் கொள்முதல் செய்யப்பட்டு தினமும் 10 டன் என்ற அளவில் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கடை கொண்டு வரப்படுகிறது. இதனால் அதிகரித்து வந்த விலை குறையத் துவங்கியுள்ளது. செடி முருங்கை கிலோ ரூ.48க்கும், மரம் முருங்கை ரூ.30க்கும் விற்கப்படுகிறது

**தீவிரமடையாத பருவ மழை; கவலையில் விவசாயிகள்**


**கூடலூர்** : தென்மேற்கு பருவ மழை, பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் இன்னும் தீவிரமடையாததால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை, வழக்கமாக ஜூன் மாதத்தில் துவங்கி 3 மாதம் வரை இருக்கும். தற்போது, பருவ மழை கேரளாவில் துவங்கி, ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. பருவ மழை முன்கூட்டியே துவங்கிய நிலையிலும், இதுவரை மழை தீவிரமடையாமல், சாரல் மழையாகவே பெய்து வருகிறது. பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை துவங்கிய துவக்கத்தில் கன மழை பெய்தது. அதன்பின், மழை குறைந்து நீர்வரத்தும் குறைந்துள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் குறைந்து, நேற்று காலை நிலவரப்படி 112.90 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 117 கன அடியாக உள்ளது. கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக 300 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 1376 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 3.8 மி.மீ., தேக்கடியில் 5.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து சாரல் மழையாகவே பெய்து வருவதால், நீர்மட்டம் உயருமா என்பதில் கேள்விக்குறியாகி உள்ளது. தற்போது,கம்பம் பள்ளத்தாக்கில் நெல் நாற்றுகள் வளர்க்கும் பணியில் தீவிரமாக உள்ளனர். இந்த நாற்றுகளை எடுத்து வயல்களை நடவு செய்வதற்கு,தொழி உழவு செய்ய வேண்டும். இதற்கு கூடுதல் தண்ணீர் தேவைப்படும். தற்போது திறந்து விடப்பட்டுள்ள 300 கன அடி நீர், அனைத்து வயல்களிலும் தொழி உழவு செய்ய போதுமானதாக இல்லை. இந்நிலையில், தற்போதே முறை வைத்து தண்ணீர்

வழங்கும் பணியில் பொதுப்பணித்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், தென்மேற்கு பருவமழையை நம்பி,விவசாயிகள் உள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### காஞ்சீபுரத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 20–ந் தேதி நடக்கிறது



**காஞ்சீபுரம்,**

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 20–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர்

அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் விவசாய பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனு அளிக்க விரும்பும் விவசாயிகள் கூட்ட அரங்கில் மனுக்கள் அளிக்கலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோவாளை சந்தையில் பூக்கள் விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் கவலை



தோவாளை சந்தையில் நேற்று பூக்களின் விலை கடும் வீழ்ச்சி அடைந்தது.

மலர்ச்சந்தை

குமரி மாவட்டம் தோவாளை மலர்ச்சந்தையாக விளங்குகிறது. தோவாளையைச் சுற்றியுள்ள ஆரல்வாய்மொழி, செண்பகராமன்புதூர், குமாரபுரம், ஆவரைகுளம், அம்பலவாணபுரம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பூக்களை தோவாளை சந்தைக்கு கொண்டு வருகிறார்கள். இதைப்போல மதுரையில் இருந்தும் தோவாளை சந்தைக்கு பூக்கள் கொண்டு வரப்படுகின்றன.

காலை 6 மணிக்கு கூடும் சந்தை, மதியம் வரை களைகட்டும். குமரி மாவட்ட வியாபாரிகள் மட்டும் இன்றி, கேரளாவில் இருந்தும் ஏராளமானோர் வந்து பூக்களை போட்டிபோட்டு வாங்கிச் செல்வார்கள். தேவை அதிகமாக இருந்தால் அன்று பூக்களின் விலை உச்சாணிக்கு செல்லும். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள். அதே நேரத்தில் பூக்களுக்கு கிராக்கி இல்லாமல் போனால் விலை, அதலபாதாளத்துக்கு செல்லும். விவசாயிகள் கவலை அடைவார்கள்.

விலை விவரம்

இந்நிலையில் கடந்த வாரம் சுபமுகூர்த்த நாட்கள் அடுத்தடுத்து வந்தன. இதனால் பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. இதன்காரணமாக விலையும் கடுமையாக உயர்ந்தது. ஆனால் நேற்று பூக்களின் விலையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டது. பூக்களின் கடந்த வார விலையும், நேற்றைய விலையும் கிலோவுக்கு வருமாறு:–

(கடந்த வார விலை, அடைப்பு குறிக்குள்)

சேலம் அரளிப்பூ – ரூ.30 (ரூ.150), சம்பங்கி – ரூ.80 (ரூ.600), மதுரை கேந்தி – ரூ.30 (ரூ.80), பட்ரோஸ் – ரூ.80 (ரூ.180), கோழிப்பூ – ரூ.20 (ரூ.70), மல்லிகை – ரூ.80 (ரூ.250), பிச்சிப்பூ – ரூ.200 (ரூ.400), சிவப்பு கேந்தி – ரூ.35 (ரூ.80), துளசி – ரூ.15 (ரூ.30), தோவாளை அரளி – ரூ.10 (ரூ.200), பாக்கெட் ரோஸ் – ரூ.20 (ரூ.40), கொழுந்து – ரூ.50 (ரூ.100).

தாமரைப்பூ ஒரு ரூபாய்

மேலும் கடந்த வாரம் 5 ரூபாய்க்கு விற்ற ஒரு தாமரைப்பூ நேற்று ஒரு ரூபாய்க்கு விற்பனையானது.

இந்த விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுபற்றி வியாபாரிகள் கூறுகையில், ‘‘பூக்களுக்கு தேவை அதிகமாக இருக்க வேண்டும், அல்லது வரத்து குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் விலை உயர வாய்ப்பு’’ என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**தர்மபுரி அருகே**

**கடும் வறட்சியால் கருகிய 3 ஆயிரம் தென்னைமரங்கள்**



**அரூர்**: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாக சரிவர பருவமழை பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைந்துவிட்டது. கிணறு, குளம், குட்டை உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு, சுமார் ஆயிரம் அடி அளவுக்கு ஆழ்துளை கிணறு அமைத்ததாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. குடிநீருக்கும் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், கம்பைநல்லூர் பகுதியில் இருந்த பனைமரங்கள் அனைத்தும் செங்கல் சூளைகளுக்கு வெட்டி பயன்படுத்தி வந்தனர்.

தற்போது, தண்ணீர் இன்றி தென்னை மரங்கள் காய்ந்ததை அடுத்து, தென்னை மரங்களையும் வெட்டி செங்கல் சூளைகளுக்கு பயன்படுத்த தொடங்கியுள்ளனர். கம்பைநல்லூர் பகுதியில் கடும் வறட்சி காரணமாக, சுமார் 3 ஆயிரம் தென்னை

மரங்கள் முற்றிலும் காய்ந்து பட்டுப்போய் கீழே விழுந்துள்ளன. இந்த ஆண்டும் மழை பொய்த்து போனால், விவசாயம் என்பதே கேள்விக்குறியாகும் நிலை உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**<u>முட்டை விலை உயர்வு: 307 காசுகளாக நிர்ணயம்</u>**



**நாமக்கல்**: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்ந்து, ஒரு முட்டை 307 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு' கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று முட்டை விற்பனை நிலவரம் குறித்து விவாதித்து, முட்டை விலையில் 4 காசு உயர்த்த முடிவு செய்தனர். அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 307 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.ஐதராபாத் உள்ளிட்ட மற்ற மண்டலங்களில் முட்டை விலை தொ டர்ந்து உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.57 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.68 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>பருவ மழை குறைந்தாலும்</u>**

**உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு வராது மத்திய அரசு தகவல்**



**புதுடெல்லி:** பருவ மழை குறைவாக பெய்தா லும் மத்திய அரசு போதுமான உணவு தானியத்தை இருப்பு வைத்துள்ளதாக மத்திய நிதித்துறை செய லாளர் அரவிந்த் மாயாராம் தெரிவித்தார். பருவ மழை சாதாரணமாக 95% பெய்ய வேண்டும். ஆனால் இந்த ஆண்டு இந்த அளவில் 2 சதவீதம் குறைவாக இருக்கும் என்றும் வட-மேற்கு மாநிலங்களில் மழை குறைவாக இருக்கும் என்றும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் கடந்த 9ம் தேதி பருவ மழை குறித்து அறிக்கை வெளியிட்டது. இந்நிலையில், மத்திய நிதித்துறை செயலாளர் அரவிந்த் மாயாரம் டெல்லியில் நேற்று நிருபர்களிடம் பேசுகையில், ‘வழக்கத்திற்கு குறைவாக தான் பருவ மழை பெய்யும் என்பதால் அச்சம் ஏதுமில்லை.

அரசு தொடர்ந்து கண்காணித்து வரும் அதே நேரத்தில் உணவுத் தானியங்கள் இருப்பு வலுவாக இருக்கிறது. எனவே, பற்றாக்குறை ஏதும் ஏற்பட்டால் அவற்றை அரசு சமாளிக்கும்’ என்றார். மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில், ஜூன் மாத கணக்குபடி, ‘இந்திய உணவுக் கழகம்’ (எப்சிஐ) தனது

கிடங்குகளில் 46.1 மில்லியன் டன் கோதுமை மற்றும் 11.4 மில்லியன் டன் நெல் இருப்பு வைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை உயர்வு: 307 காசுகளாக நிர்ணயம்



**நாமக்கல்**: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்ந்து, ஒரு முட்டை 307 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு' கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று முட்டை விற்பனை நிலவரம் குறித்து விவாதித்து, முட்டை விலையில் 4 காசு உயர்த்த முடிவு செய்தனர். அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 307 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

ஐதராபாத் உள்ளிட்ட மற்ற மண்டலங்களில் முட்டை விலை தொ டர்ந்து உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.57 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.68 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>குன்னூரில் தேயிலை விற்பனை வீழ்ச்சி</u>**



**குன்னூர்:** நீலகிரி மாவட்டம் குன்னூர் தேயிலை மையத்தில் இந்த ஆண்டுக்கான 24வது ஏலம் நடைபெற்றது. மொத்தம் 16.03 லட்சம் கிலோ டீத்தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 10.66 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.37 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்றனர். இருப்பினும், குறைந்த விலைக்கு வாங்கியதால் 73 சதவீத டீத்தூள் மட்டுமே விற்பனையானது. அனைத்து ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வரை விலை சரிவு ஏற்பட்டது.

இந்த வார நிலவரப்படி, இலை ரகம் சாதா கிலோ ரூ.50 முதல் ரூ.52 வரையும், உயர் ரகம் ரூ.100 முதல் ரூ.160 வரையும், டஸ்ட் ரகம் சாதா ரூ.57 முதல் ரூ.61 வரையும், உயர் ரகம் ரூ.170 முதல் ஸி180 வரையும் விற்றது. சிடிசி டஸ்ட்

ரகத்துக்கு அதிகபட்சமாக ரூ.191ம், ஆர்த்தோடக்ஸ் ரகத்துக்கு ரூ.222ம் கிடைத்தது. அடுத்த ஏலத்துக்கு 15.69 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக இருக்கிறது என்றும் ஏல மைய நிர்வாகிகள் தெரிவித்தனர்.